Nationalisation of cinema houses

* 98 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state :

(a) whether there is any proposal pending before the Government to nationalise cinema houses in the State ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : சார், இம்மாநிலத்தில் திரைப்பட அரங்குகளில் நுழைவுக் கட்டணம், அதாவது டிக்கெட்டு, அதிகமாக இருப்பதால் ,சாதாரண ஏழை மக்கள் பல படங்களைப் பார்க்க முடியாமல் போய்விடுகிறது. இப்பொழுது சர்க்காரே ஏற்று நடத்தும் வாய்ப்பு இல்லாவிட்டாலும், இனிமேலாவது தமிழக சர்க்கார் அவர்களே திரைப்பட அரங்கை பரீட்சார்த்தமாகக் கட்டி நடத்தி, குறைந்த, நியாயமான கட்டணம் வாங்கி எல்லோரும் சினிமா பார்க்கும்படிச் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முதலிலேயே சொன்னேன், இப்பொழுது அந்த எண்ணம் அரசுக்கு இருக்கவில்லையென்று.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையைச் சேர்ந்த ஒருவர், 1967 ஜனவரியிலேயே, சென்னை மைலாபூரில் பேசுகின்றபோது, படியரிசித் திட்டத்தை நடத்த தமிழக சர்க்கார் சினிமாத் துறையை தேசியமாக்கலாம் என்று சொன்னார்கள். படி அரிசித் திட்டத்தை அமலாக்க, சினிமாவை அரசு தேசியமாக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அமைச்சர் அளித்த பதிலை கனம் உறுப்பினர் கவனித்து இருந்தால், இந்தத் துணைக் கேள்வி போட வேண்டிய அவசியம் இல்லை என்பதை உணர்ந்திருக்கலாம். அவர்கள் ' அந்த உத்தேசம் இப்பொழுது இல்லை ' என்று சொன்னார்கள். (சிரிப்பு)

திரு. கே. என். குமாரசாமி : சினிமாத் துறையை அரசாங்கம் தேசியமாக்கவிட்டாலும், முனிசிபாலிடி, நகரசபை இவற்றின் வருமானத்தைப் பெருக்கும் அளவிற்கு, அவற்றின் கீழ் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட திட்டமும் இப்பொழுது இல்லை.